# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.8/2023

## அ.சா.10 (LW 15 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அகமது சேக் | **தொழில்** | **மருத்துவர்** |
| **த/க பெயர்** | அப்துல்ஜப்பார் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **18.09.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.062022 அன்று நான் முறைப்படி பணியிலிருந்த போது அம்மையநாயக்கனூர் காவல்நிலைய குற்ற எண். 132/2022 வழக்கில் சம்மந்தப்பட்ட 24 வயதுடைய ஆண்பிரேதம் ராஜ்குமார் என்பவருக்கு பிரேத பரிசோதனை செய்து சான்று வழங்கும்படி அம்மையநாயக்கனூர் காவல்நிலைய ஆய்வாளர் அவர்களால் வேண்டுகோள் கடிதத்தின் படி தலைமை காவலர் 2142 அழகுராஜா என்பவர் என்னிடம் அடையாளம் காட்டினார். **அந்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.8. ஆகும்.**

பிரேத பரிசோதனை பகல் 11.40 மணிக்கு தொடங்கப்பட்டது. மிதமான உடல் வாகுடைய ஆண்பிரேதம் உடல் முழுவதும் விரைத்து காது, மூக்கு பகுதியில் இரத்தம் கசிந்து கழுத்தில் வெட்டுக் காயங்களுடன் காணப்பட்டது.

**பிரேதத்தில் காணப்பட்ட காயங்கள்**

1, வெட்டுக்காயம் 5 X 2 செமீ முகத்தின் ஆழம் வரை வலது முகப்பகுதியில் காணப்பட்டது. அதை பகுப்பாய்வு செய்து பார்த்ததில் வலது முகத்தில் கீழ்பகுதியில் உள்ள எலும்புகள் உடைந்து தாடை எலும்புகளும் உடைந்து அதனை சுற்றி இரத்தக் கட்டுடன் காணப்பட்டது.

2. வெட்டுக்காயம் 6 X 3 செமீ வாயின் ஆழம் வரை தாடையில் காணப்பட்டது. அதை பகுப்பாய்வு செய்து பார்த்ததில் தாடை எலும்பு உடைந்து சுற்றி இரத்தக் கட்டுடன் காணப்பட்டது.

3. வெட்டுக்காயம் 15 X 7 செமீ மூச்சுக்குழலின் ஆழம் வரை கழுத்தின் கீழ் பகுதியில் காணப்பட்டது. ஆழமாக பகுப்பாய்வு செய்து பார்த்ததில் காயத்தின் பகுதியில் உள்ள இரத்த நாளங்கள் மற்றும் நரம்புகள் வெட்டி காணப்பட்டது. மூச்சுக்குழல் தைராய்டு நொறுக்கு எலும்புக்கு கீழ் அறுந்து இரத்தக் கட்டுடன் காணப்பட்டது.

4. வெட்டுக்காயம் 10 X 4 செமீ எலும்பின் ஆழம் வரை வலது பக்க பின் மண்டையில் காணப்பட்டது. அதை பகுப்பாய்வு செய்து பார்த்ததில் மண்டை ஓட்டின் பின் எலும்பு உடைந்து காணப்பட்டது.

5. வெட்டுக்காயம் 7 X 2 செமீ தோலின் ஆழம் வரை வலது கன்னத்தில் காணப்பட்டது.

6. வெட்டுக்காயம் 4 X 1 செமீ தோலின் ஆழம் வரை வலது காதுக்கு கீழ் காணப்பட்டது.

7. வெட்டுக்காயம் 10 X 1 செமீ தோலின் ஆழம் வரை வலது பக்க முன் மண்டையில் காணப்பட்டது.

8. சிராய்ப்பு காயம் 10 X 1 செமீ அளவில் இடது பக்க கழுத்தின் மேல்பகுதியில் காணப்பட்டது.

9. ஒன்றுக்கு மேற்பட்ட கருஞ்சாம்பல் நிற சிராய்ப்பு காயங்கள் ஒவ்வொன்றும் 1 X 1 செ.மீ இடது பக்க நெஞ்சு பகுதியில் காணப்பட்டது.

10. வெட்டுக்காயம் 6 X 4 செமீ அளவில் எலும்பின் ஆழம் வரை மண்டையின் இடது பக்கத்தில் காணப்பட்டது.

11. இரண்டு சிராய்ப்பு காயங்கள் ஒவ்வொன்றும் 1 X 1 செ.மீ நெஞ்சுக்கு பின் பகுதியில் காணப்பட்டது.

12. மூன்று கருஞ்சாம்பல்நிற சிராய்ப்பு காயங்கள் 1 X 1 செ.மீ நெஞ்சின் மையப்பகுதியில் பின் புறத்தில் காணப்பட்டது.

13, கருஞ்சிவப்பு சிராய்ப்பு காயங்கள் 3 X 1 செ.மீ வலது தொடையின் நடுப்பகுதியில் காணப்பட்டது.

14. கருஞ்சிவப்பு சிராய்ப்பு காயங்கள் 3 X 1 செ.மீ இடது முட்டியின் பின் பக்கத்தில் காணப்பட்டது.

இதை தவிர்த்து வேறு எந்த காயங்களும் காணப்படவில்லை.

மண்டை பகுதியை பகுப்பாய்வு செய்து பார்த்ததில் கருஞ்சிவப்பு இரத்தக் கட்டு காயம் 14 X 7 செ.மீ தோளின் ஆழம் வரை மண்டையின் பின் பகுதியில் காணப்பட்டது.

மூளைப்பகுதியை சுற்றி இரத்தக்கட்டுடன் காணப்பட்டது. மண்டை ஓட்டின் அடிப்பகுதி பின்புறத்தில் உடைந்து காணப்பட்டது.

வயிற்றுப்பகுதியை பகுப்பாய்வு செய்து பார்த்ததில் 100 எம்.எல் அளவில் சாம்பல்நிற திரவம் பழச்சாறு வாசனையுடன் காணப்பட்டது.

வயிற்றின் உள்சவ்வு வெளிறி காணப்பட்டது.

உடல் உள்ளுறுப்புக்களை இரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தியதில் எந்தவிதமான நச்சுப் பொருளோ, எத்தனாலோ தென்படவில்லை என்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து அறிக்கை பெறப்பட்டது. அந்த ஆய்வறிக்கை இதுதான். **அது அ.த.சா.9. ஆகும்.**

அதனை தொடர்ந்து 27.06.2022 அன்று மேற்கூறிய நபர் கழுத்தில் ஏற்பட்ட வெட்டுக்காயத்தினால் இறந்திருக்க கூடும் என இறுதி அறிக்கை வழங்கியுள்ளேன். **நான் வழங்கிய உடற்கூராய்வு அறிக்கை இதுதான் அது அ.த.சா.ஆ.10 ஆகும். நான் வழங்கிய இறுதி கருத்துரை இதுதான். அது அ.த.ச..11. ஆகும்.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.18 17:40:49 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.